1971 டிசம்பர் 16]

Dr. Sundaraventakrishnan had reported that the patient had a thorn prick in the foot three days prior to admission in the hospital, namely, on 12th August 1970.

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே இசிவு நோய் கண்டது சிகிச்சையிலே ஏற்பட்ட குறைபாடா என்பது கண்டுபிடிக்க முடியவில்லை, அல்லது ஆப்பரேஷன் தியேட்டரிலே ஏற்பட்ட குறைபாடா என்று சொல்லமுடியவில்லை. குறிப்பிட்ட நோயாளியைப் பொறுத்தவரையில் வேறு காரணங்கள் இருந்திருக்கலாம். இனிமேல் அப்படி ஏற்படாமல் பிரிகாஷனரி மெஷர்ஸ் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

Local Fund Dispensary at Denkanikota

*456. Q.—Thiru K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to upgrade the local fund hospital at Denkanikota; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (ஆ) தேன்கனிக் கோட்டையிலுள்ள ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை அரசு ஏற்று நடத்த என் 2176 சுகாதாரம் 19—8—1971-ல் ஆணை பிறப்பித்துள்ளது.

Thiru K. S. KOTHANDARAMIAH: Sir, may I know whether the orders for upgrading the Denkanikottah hospital is sent to the authorities there and action taken?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த ஆணையின்படி நடவடிக்கைகளும் எடுக்கத் தொடங்கியுள்ளார்கள்.

சேத்தூர் நகர பஞ்சாயத்துக்கு அரசு மருத்துவமனை

*457 **வினா—திரு. க. சுப்பு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் உள் வட்டம், சேத்தூர் நகரப் பஞ்சாயத்தில் நிறைந்த வசதிகளோடு கூடிய அரசாங்க மருத்துவ மனை ஒன்றை அமைக்கக் கோரி இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சிக்குழு நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்தின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தீர்மானம் வரவில்லை.